திரு. என. கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு மெகோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? இதை விரைவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த மின் நிலையத்தின் உற்பத்தித்திறன் 50 மெகோவாட். இதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு சராசரி 109 மிலியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீட்டுச் செலவு சுமார் 10 கோடி ரூபாய் என்று இருக்கிறது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படுவதாகக் குறிப்புகள் இருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சார், அதற்கான மெஷினரிகள் எல்லாம் வந்துவிட்டனவா? அல்லது ஆர்டர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்தத் திட்டம் எப்போது பூர்த்தி செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. ஆரம்ப வேலைகள்தான் நடைபெற்று வருகின்றன.

அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை

* 189 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர், 28—1—1974 அன்று வினா எண். 197-க்கு அளித்த விடையை யொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை ஒன்று தமிழ்நாட்டில் அமைப்பது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொழிற்சாலை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அயல்நாட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டு உதவியைப் பெறுவதற்கு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டு இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதை எங்கே அமைக்க இருக்கிறார்கள்? இதற்காகும் மதிப்பீட்டுத் தொகையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரைக்குப் பக்கத்திலே அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மதிப்பீட்டுச் செலவு ஐந்து கோடியே ஐம்பது லட்சம் ரூபாய்.

1975 மார்ச் 5]

திரு. எம். சுரேந்திரன் : அலுமினியம் ப்ளோரைடு தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே அலுமினியம் தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் மிகவும் சலுகைகள் கொடுக்கப்படுகிறதே அதைப்போன்று இதற்கும் சலுகைகள் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது அலுமினியத் தொழிற்சாலை அல்ல ; ப்ளோரைடு அன்ட் அதர் கெமிக்கல்ஸ் சம்பந்தமான தொழிற்சாலை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஏற்கனவே 28—1—1974 ஆம் தேதியில் கேள்வி எண். 197-க்குப் பதில் அளிக்கப்பட்டதிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட கேள்வி என்ன ? அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் அதற்குக் கொடுத்த பதில் என்ன என்று கூறுவார்களா ?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கான பதிலை ஒட்டித்தான் சொல்ல முடியுமே தவிர, அந்தக் கேள்விக்கான பதிலைச் சொல்ல இயலாது. அங்கத்தினர்தான் அதைப் படித்து விட்டு வர வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், 28—1—1974 ஆம் தேதி அந்தக் கேள்விக்கு அளித்த பதிலில், இந்த அலுமினியம் ப்ளோரைட் பேக்டரி மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்று அன்றைக்கிருந்த தொழில் அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த வாக்குறுதி காப்பாற்றப்படுமா என்ற விஷயம் அஷ்யூரன்ஸ் கமிட்டியிலேயும் எழுப்பப்பட்டது. ஆகவே, அது சம்பந்தமாக என்ன கூறுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதில் என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது என்று தெரியவில்லை. அலுமினியம் ப்ளோரைட் பேக்டரி ஒன்றுக்கே டெல்லியிடம் தவம் கிடக்கிறோம். அந்தத் தவம் முடிந்து அவர்கள் அனுமதித்த பிறகு மற்ற மாவட்டங்களைப்பற்றி யோசிக்கலாம்.

இரயில்வே செஸ் நிதி

*** 190 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேரவேண்டிய இரல்வே செஸ் எந்த ஆண்டு வரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது ?